களுக்குச் செய்யப்படுகின்ற மற்ற வசதிகளோடு, சுகாதார வசதியும் செய்ய வேண்டியிருக்கிறது. பஸ்களிலும் அந்த இடங்களுக்கு ஏராளமான மக்கள் வருகிருர்கள். ஆகவே, ரயில் மூலம் வருகிறவர்களிடம் யாத்திரீகர் கள் வரி வசூலிப்பதுபோல் பஸ்களில் வருகின்றவர்களிடமும் வசூலிக்க அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, ரயில்வே நிர்வாகத்தினர் டிக்கட்டோடு சேர்த்து வசூலித்துவிடுவதால் சுலபமாக இருக்கிறது. அவர்கள் திருவிழா நடைபெறுகின்ற காலங்களில் மட்டுமல்லாமல் எல்லாச் சமயங்களிலும் வசூலிக்கிருர்கள். அது சுலப மாகவும் இருக்கிறது. பஸ்களில் வருகின்றவர்களிடம் வசூலிப்பது கடின மானது. அதோடு பல தொல்லைகளும் ஏற்படும்.

நகராட்சி மன்றங்கள்

*772 வினு :—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா :—

நகராட்சி மன்றங்களின் இரட்டை மெம்பர் வார்டுகளை ஒற்றை மெம்பர் வார்டுகளாக மாற்றி அமைக்கும் உத்தேசம் அரசாங்கத்திற்கு உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

புதிய கல்லூரிகள்

*773 வினு :—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா :—

கோவை நகரில் அரசுத் தரப்பில் ஓர் கலைக் கல்லூரி ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பொதுமக்களிடமிருந்து, ஐந்து இலட்ச ரூபாய் நன்கொடை கிடைத்து, இடவசதியும் செய்யப்பட்டால் புதுக் கல்லூரி ஒன்று கோவையில் திறக்கப்படலாம்.

*774 வினு :—திரு. கே. என். குமாரசாமி : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா :—

பல்லடம் நகரத்தில் கல்லூரி ஒன்று திறந்து நடத்த அரசிடம் செயற் குறிப்பு ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இல்லை.